திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்ரவாண்டி ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் நடைபெறுகின்ற இடம் மிகவும் நெருக்கடியான இடம், சமூக விரோதிகளுக்கு இடம் தரக்கூடிய இடம். தயவு செய்து அரசு விரைவாக நடவடிக்கை எடுத்து, நிலத்தைக் கையகப்படுத்தி கட்டிடம் கட்டிக் கொடுக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்ரவாண்டி ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் கட்டுவதற்காக 5 ஏக்கர் ஒரு இடத்திலும், மற்றொரு இடத்திலே 14 ஏக்கர் நிலமும் பார்க்கப்பட்டு, நெகோசியேஷன்ஸ் நடைபெறுகிறது, நேரடியாக விலை பேசப்பட்டு வருகிறது. பேசி முடிந்தவுடன் இந்த ஆண்டு கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

போர்வெல் போடுதல்.

* 5476 திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் பாசனக் கிணறுகள் பல வறண்டு விட்டதால், அரசே குறைந்த கட்டணம் பெற்று வேளாண்மைத் துறை மூலம் போர்வெல் போட்டுக் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். வேளாண்மைப் பொறியியல் துறையால் குறைந்த வாடகையில் துளை போடும் கருவிகள் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளரும், விடுதலை வீரரும், பகுதித்தறிவுப் பகலவனுமாகிய தந்தை பெரியார் பிறந்த பெரியார் மாவட்டத்திலே அந்தியூர் தொகுதியிலே உள்ள அனைத்து விவசாயிகளுடைய கிணறுகள் எல்லாம், கடந்த 3, 4 ஆண்டுகளாக மழை பொய்த்ததன் காரணமாக வறண்டு போய்விட்டன, அங்கேயுள்ள மக்கள்....

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1990 ஏப்ரல் 5]

9-45 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விடையின் அடிப் படையில் தொடர் வினா அமைய வேண்டும். மற்றொரு முறை பெரியார் பேருரையைக் கேட்போம். (சிரிப்பு)

திரு. வே. பெரியசாமி: அந்த விவசாயிகள் வாங்கிய கடன்களைக்கூட கட்ட முடியாத துர்ப்பாக்கியமான சூழ் நிலைக்கு உந்தப்பட்டு இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு அரசாங்கம் குறைந்த செலவில் ஆழ்துளைக் கிணறுகளை அமைக்கின்ற நேரத்தில் அதில் தண்ணீர் இல்லை என்று சொன்னால் அவர்கள் அந்த கிணறுகள் அமைக்கப்படுவதற்கு ஆன செலவுகளை எல்லாம் ரத்து செய்தும், மீதி உள்ள கிணறை குறைந்த தொகையில் போட்டுக் கொடுப்பதற்கு இந்த அரசு விரைவில் முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பொறி யியல் துறை மூலம் குறைந்த வாடகையில் துளைக் கருவி போர் வெல் போட வழங்கப்படுகிறது என்று தான் பதில் சொன்னேன். மலைவாசி, ஆதி திராவிடர்களுக்கு 50 சதவீதம் மானியத் தொகையும் வழங்கப்படுகிறது. இதற்கு மேல் விளக்கம் தேவையில்லை என்று கருதுகிறேன்.

ஆத்தூர் ஆதி திராவிட மாணவ, மாணவியர் விடுதிகளை விரிவாக்குதல்

* 3121 திரு. எஸ். குணசேகரன்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆத்தூர் ஆதி திராவிட மாணவ, மாணவியர் விடுதி களை விரிவாக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

ஆத்தூர் ஆதி திராவிட மாணவர் விடுதியில் மாணவர் களின் எண்ணிக்கையை 90-லிருந்து 105 ஆக உயர்த்தும் செயற் குறிப்பு மட்டும் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.